**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 01/2023**
**Prosecution Witness**:3

| | | | |
|---|---|---|---|
| Name | (PW3) கார்த்தி | Taluk | |
| Father's Name | செல்வம் | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th **day of October 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present. )***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

1) நான் தற்போது சாலைப்புதூரில் குடியிருந்து கொண்டு வெங்கமேட்டில் உள்ள இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன். ஆஜரில் உள்ள எதிரியை எனக்கு தெரியும். அவர்தான் விபத்தின்போது டாரஸ் லாரியை பின்புறமாக இயக்கி விபத்தை ஏற்படுத்தியவர் ஆவார். கடந்த 11.12.2021ம் தேதியன்று நான் எனது பெட்ரோல் பங்கில் இருந்தேன். அதிகாலை 04.45 மணியளவில் எங்களது பெட்ரோல் பங்கில் நிறுத்தியிருந்த டாரஸ் லாரியை ஆஜர் எதிரி அதை பின்புறமாக ரிவர்சில் எடுத்தார். அப்போது ஒரு எக்ஸ்எல் வாகனத்தில் இருந்து சாலைப்புதூரில் இருந்து ஒரு கணவனும், மனைவியும் மேற்கில் இருந்து கிழக்கு திசை நோக்கி வந்தார்கள். எதிரி மேற்படி டாரஸ் லாரியை பின்புறமாக எடுத்தபோது விபத்து நடந்தது. டாரஸ் வாகனத்தின் பதிவு எண்.TN 59 2125 ஆகும்.

2) மேற்படி விபத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ஆணுக்கு தலையிலும், அதில் அமர்ந்த வந்த பெண்ணுக்கு கையிலும் காயம்பட்டது. மேற்படி விபத்தை நானும், உடன் இருந்த நெடுமாறன் என்பவரும் பார்த்தோம். அடிபட்டவர்களை கரூரில் உள்ள செந்தில்நாதன் மருத்துவமனைக்கு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்தோம். போலீசார் சம்பவ இடம் வந்து பார்வையிட்டு விசாரித்தார்கள். என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

**1)** நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். மேற்படி பெட்ரோல் பங்கில் 10 வருடங்களாக வேலை பார்த்து வருகிறேன். பங்கில் வருகை பதிவேடு உள்ளதா என்றால் இல்லை. சம்பளம் வாங்குவதற்கான ரசீது வைத்துள்ளேனா என்றால் இல்லை.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.06 06:07:10 +0530

பெட்ரோல் பங்கில் வேலை பார்ப்பதற்கான அடையாள அட்டை வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். அடையாள அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். போலீசார் விசாரணையில் மேற்சொன்ன சங்கதிகளை கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது முதல் விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) எத்தனை மணி நேரம் வேலை நேரம் என்றால் காலை 09.00 மணிக்கு சென்றால் அடுத்த நாள் காலை 09.00 மணி வரை வேலை நேரம். பெட்ரோல் பங்க் இயங்கும் நேரம் என்ன என்றால் அதிகாலை 04.00 மணி முதல் இரவு 11.00 வரை இருக்கும். பெட்ரோல் பங்கில் பெட்ரோல் நிரப்பும் வேலையைத்தான் கவனமாக பார்ப்போம் என்றால் சரிதான். எதிரி பெட்ரோல் பங்கில் டீசல் நிரப்பினாரா என்றால் இல்லை. நான் பெட்ரோல் பங்கில் வேலையை பார்த்துக் கொண்டிருந்ததால் நான் விபத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சத்தம் கேட்ட பிறகுதான் பார்த்தேன் என்றால் இல்லை. விபத்து நடக்கும்போதே பார்த்தேன். சம்பவம் நடந்தது தார் சாலையிலா அல்லது மண் சாலையிலா என்றால் தார் சாலையில் நடந்தது.

3) பெட்ரோல் பங்கில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டுள்ளதா என்றால் பொருத்தப்பட்டுள்ளது. சிசி டி வி கேமாராவை பார்த்தால் நான் அந்த நேரத்தில் வேலை பார்த்தேனா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரத்தில் பங்கில் வேலையில் இல்லை என்றும், சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரி பெட்ரோல் பங்கில் டாரஸ் லாரியை நிறுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் துறையினர் கேட்டுக் கொண்டதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியால் விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் வந்த நபரின் கவனக்குறைவால்தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:— இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.06 06:07:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 01/2023**
**Prosecution Witness**:4

| Name | (PW4) நெடுமாறன் | Taluk | |
|---|---|---|---|
| Father's Name | செல்வம் | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th **day of October 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present. )*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

1) நான் தற்போது சோளக்காளிபாளையத்தில் குடியிருந்து கொண்டு வெங்கமேட்டில் உள்ள இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன். ஆஜரில் உள்ள எதிரியை எனக்கு தெரியும். அவர்தான் விபத்தின்போது வாகனத்தை பின்புறமாக இயக்கி விபத்தை ஏற்படுத்தினார். கடந்த 11.12.2021ம் தேதியன்று நானும், அ.சா.3 கார்த்தியும் மேற்படி பெட்ரோல் பங்கில் இருந்தோம். அதிகாலை 04.45 மணியளவில் ஒரு டாரஸ் லாரி எங்களது பங்கில் இருந்து பின்புறமாக ரிவர்சில் வந்தது. மேற்சொன்ன லாரியை ஆஜர் எதிரிதான் பின்புறமாக ஓட்டி வந்தார். அப்போது சாலைப்புதூரில் இருந்து ,இருசக்கர வாகனத்தில் ஒரு ஆண்நபரும், பெண்நபரும் வந்தார்கள். அவர்கள் சாலைப்புதூரில் இருந்து கரூர் நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். ரிவர்சில் வந்த டாரஸ் லாரி இருசக்கர வாகனத்தின் மீது இடித்து விபத்து ஏற்பட்டது. அந்த டாரஸ் லாரியின் பதிவு எண்.2125 ஆகும். மேற்சொன்ன விபத்தை நானும், அ.சா.3 கார்த்தியும் பார்த்தோம்.

2) இருசக்கர வாகனத்தில் வந்த ஆண் நபருக்கு தலையிலும், பின்புறத்தில் அமர்ந்து வந்த பெண்மணிக்கு கையிலும் அடிபட்டிருந்தது. தனியார் ஆம்புலன்ஸ் மூலம் கரூர் தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் சம்பவ இடம் வந்து பார்வையிட்டு விசாரித்தார்கள். என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். பெட்ரோல் பங்கில் வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்வேனா என்றால் இல்லை. பெட்ரோல் பங்கில் இருந்து சம்பளம் வங்கி கணக்கிற்கு வருகிறதா என்றால் இல்லை. கையில்தான் கொடுப்பார்கள். சம்பளம் வாங்குவதற்கு கையொப்பம் செய்வேனா என்றால் செய்வேன். அந்த நோட்டு

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.06 06:07:22 +0530

ஓனரிடம் உள்ளது. விபத்து தார் சாலையிலா அல்லது மண் ரோட்டில் நடந்தது என்றால் மண் ரோட்டில் நடந்தது. காலையில் எத்தனை மணிக்கு பங்கு திறப்போம் என்றால் சுமார் 04.45 மணிக்கு திறப்போம். காலை 04.45 மணிக்கு பெட்ரோல் பங்கில் உள்ள பம்புகள் சரியாக உள்ளதா என்று பரிசோதிப்போம் என்றால் சரிதான். அதை பரிசோதிக்க 1/2 மணி நேரம் ஆகும் என்றால் சரியல்ல. 10 நிமிடம் ஆகும்.

2) சம்பவம் நடந்த அன்று எத்தனை மணிக்கு எழுந்தேன் என்றால் 04.30 மணிக்கு எழுந்தேன். 04.45 மணிக்கு நான் பம்பு வேலையைத்தான் பார்ப்பேன். போலீசார் என்னை விசாரித்தபோது மேற்படி விவரத்தைத்தான் சொன்னேன் என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் நான் என்ன சொன்னேன் என்றால் சத்தம் கேட்ட பிறகுதான் விபத்தை பார்த்ததாக சொன்னேன். இருசக்கர வாகனத்தில் வந்த நபரால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து 10 மீட்டர் தொலைவில்தான் இருந்தேன். லாரி பின்பக்கமாக வந்து இருசக்கர வாகனத்தில் இடித்தது. நான் பங்கில் உள்ள வேலையை பார்த்ததால் நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

3) ஆஜர் எதிரி பெட்ரோல் பங்கில் டாரஸ் லாரியை நிறுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் துறையினர் கேட்டுக் கொண்டதன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியால் விபத்து நடக்கவில்லை என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் வந்த நபரின் கவனக்குறைவால்தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:**இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.06 06:07:28 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 01/2023**
**Prosecution Witness**:5

| | | | |
|---|---|---|---|
| Name | (PW5) செந்தில் | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **06th day of October 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present. )***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

1) நான் தற்போது சிவகிரி, அம்மன்கோவிலில் குடியிருந்து கொண்டு பேக்கரி கடை வைத்துள்ளேன். விபத்தில் இறந்துபோன செல்வராஜ் எனது மாமனார் ஆவார். பார்வதி எனது மாமியார் ஆவார். கடந்த 2021ம் வருடம் ஒரு நாள் எனது மாமனார் செல்வராஜும், மாமியார் பார்வதியும் இருசக்கர வாகனத்தில் சிவகிரியில் உள்ள எனது வீட்டிற்கு வந்துவிட்டு திரும்பி சாலைப்புதூரில் இருந்து நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூரில் உள்ள கூடுதுறைக்கு சென்று கொண்டிருந்தார்கள். அன்று அதிகாலை 04.45 மணியளவில் வெங்கமேட்டில் இந்தியன் பெட்ரோல் பங்க் அருகில் வந்தபோது மேற்படி பெட்ரோல் பங்கில் இருந்து பின்புறமாக வந்த டாரஸ் லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக பெட்ரோல் பங்கில் இருந்து போன் மூலம் தகவல் சொன்னார்கள்.

2) நான் தகவல் கேள்விபட்டு கரூர் தனியார் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். என் மாமனார் செல்வராஜுக்கு தலையில் காயம் இருந்தது. எனது மாமியார் பார்வதிக்கு லேசான காயங்கள் இருந்தது. பின்னர் எனது மாமனார் செல்வராஜை மேல்சிகிச்சைக்காக கோவை ராயல் கேர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். பின்னர் இரண்டு நாட்கள் சிகிச்சை முடித்து எனது மாமனாரை சேலம் குமாரமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அவர் கடந்த 20.12.2021ம் தேதி சேலம் குமாரமங்கலம் மருத்துவமனையில் இறந்துவிட்டார். விபத்து பற்றி எனது மாமியார் அ.சா.1 பார்வதி கொடுமுடி காவல் நிலையத்தில் புகார் செய்திருந்தார்.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.06 06:07:34 +0530

கொடுமுடி காவல் ஆய்வாளர் சேலம் மோகன்குமாரமங்கலம் அரசு மருத்துவமனைக்கு வந்து இறந்துபோன எனது மாமனார் செல்வராஜ் பிரேத்தின் மீது விசாரணை செய்தபோது நானும் உடனிருந்தேன். என்னையும் போலீசார் விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) விபத்தில் இறந்துபோனவர் எனது மாமனார் ஆவார். அ.சா.1 பார்வதி எனது மாமியார் ஆவார். அ.சா.2 கவின்குமார் எனது மச்சினன் ஆவார். எனது மாமனார் இறந்துபோனதற்கும், மாமியார் அடிபட்டதற்கும் விபத்து நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆமாம். விபத்து இழப்பீடு பெற்றுவிட்டோமா என்றால் பெற்றுவிட்டோம். சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் ஆமாம். நஷ்டு ஈடு அதிகம் பெற வேண்டும் என்பதற்காக அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:**இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.06 06:07:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 01/2023**
**Prosecution Witness**:6

| | | | |
|---|---|---|---|
| Name | (PW6) வீரமுத்து | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **06th day of October 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present. )***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

1) நான் தற்போது நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர், கூடுதுறையில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 11.12.2021ம் தேதி செல்வராஜ் என்பவருக்கு நடந்த விபத்து சம்மந்தமாக அவரது மகளிடம் விசாரிப்பதற்காக சிவகிரிக்கு வந்து கொண்டிருந்தேன். வெங்கமேட்டில் உள்ள விபத்து நடந்த இடமான பெட்ரோல் பங்க் அருகில் வந்து கொண்டிருந்தேன். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு அளந்து குறித்துக் கொண்டிருந்தார்கள். அதற்காக நானும், ராஜா என்பவரும் கையெழுத்து செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கில் இறந்துபோன செல்வராஜுக்கு என்ன உறவு என்றால் தெரிந்தவர் மற்றும் உள்ளூர்க்காரர். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் விசாரித்தபோது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் நானும், ராஜா என்பவரும் செல்லும்போது அங்கு சில போலீசார் இருந்தார்கள். ராஜா எந்த ஊர்க்காரர் என்றால் எங்க ஊர்க்காரர்தான். இறந்துபோன செல்வராஜுக்கு எதிர்வீட்டுக்காரர். ராஜா செல்வராஜுக்கு உறவினரா என்றால் ஆமாம். போலீசார் விசாரித்தபோது என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். கையெழுத்து செய்த தாளில்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.06 06:07:45 +0530

என்ன எழுதியிருந்தது என்றால் எனக்கு தெரியாது. கையெழுத்து போடச் சொன்னார்கள் போட்டேன். சம்பவ இடத்தில் போலீசார் என் முன்னிலையில் புகைப்படம் எடுத்தார்களா என்றால் இல்லை. போலீசார் கொடுத்த பேனாவில் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் என் முன்னிலையில் வரைபடம் வரைந்தார்களா என்றால் ஏற்கனவே வரைந்து வைத்திருந்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் எனக்கு உறவினர் என்பதால் புகார்தாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.10.06 06:07:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.